தினமணி

## சலுகைகளை எதிர்நோக்கும் டீசல் என்ஜின் விவசாயிகள்!

First Published : 21 Aug 2010 03:38:45 AM IST



காஞ்சிபுரம், ஆக.20: இலவச மின்சாரம், பழைய மோட்டாருக்கு பதிலாக புதிய மின் மோட்டார் என்று விவசாயிகளுக்கு வழங்கப்படும் எந்தச் சலுகைகளும் இல்லாமல் டீசல் என்ஜினை பயன்படுத்தும் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலைகளும், தொழில் நிறுவனங்களும் பெருகி வருகின்றன. இந்நிலையில் பல விவசாயிகள் தங்கள் நிலங்களை ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கு விற்றுவிட்டு வேறு தொழிலுக்கு மாறிவருகின்றனர். பாரம்பரியமான விவசாயத் தொழிலை விடமுடியாமலும், விட மனமில்லாலும் பல விவசாயிகள் விவசாயத்தை தொடர்ந்து வருகின்றனர்.

÷மாவட்ட நிர்வாக கணக்கின்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1,45,966 ஹெக்டேரில் நெல் விவசாயமும், 7,586 ஹெக்டேரில் கரும்பு விவசாயமும், 28,766 ஹெக்டேரில் வேர்கடலை விவசாயமும் நடைபெறுகிறது. இதில் மின் மோட்டார் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ஏற்கெனவே மின்மோட்டார் வைத்திருந்த விவசாயிகளும் லாபம் அடைந்தனர். இதனைத் தொடர்ந்து டீசல் என்ஜின் வைத்திருந்த பல விவசாயிகள் |50 ஆயிரம், | 25 ஆயிரம் கட்டணம் செலுத்தி புதிய மின் இணைப்புகளை பெற்றனர். இப்போது மின் மோட்டார் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு புதிய மோட்டாரும் வழங்கப்பட உள்ளது.

÷ஆனால் | 50 ஆயிரம் செலுத்த முடியாமல் இலவச மின் இணைப்புக்கு விண்ணப்பித்துவிட்டு இன்னும் ஏழை விவசாயிகள் ஊருக்கு ஒன்றிரண்டு பேர் காத்துக் கிடக்கின்றனர். இவர்கள் டீசல் என்ஜினை வைத்துக் கொண்டு விவசாயம் செய்து வருகின்றனர்.

÷அடிக்கடி டீசல் விலை உயரும்போது இந்த விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். ஏற்கெனவே விவசாயத்தில் லாபகரமான சூழல் இல்லாத நிலை உள்ளது. இந் நிலையில் டீசலை என்ஜினை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு இன்னும் கூடுதல் ஆகிறது.

÷மின் மோட்டார் வைத்திருக்கும் விவசாயிகளைப் போல் டீசல் என்ஜின் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் அரசு உதவ வேண்டியது அவசியம். இவர்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும். அல்லது உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்கப்படுவதுபோல் விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்கின்றனர் இவர்கள்.

÷இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் இயக்கத்தின் மாநில அமைப்பாளர் த.தமிழினியனிடம் கேட்டபோது அவர் கூறியது: டீசல் என்ஜின் வைத்துக் கொண்டு விவசாயம் செய்யும் விவசாயிகளை டீசல் விலையேற்றம் கடுமையாக பாதித்துள்ளது. அவர்களுக்கு ரேஷன் கார்டு போல் ஒரு அட்டை வழங்கி எவ்வளவு நிலம் வைத்துள்ளனர் என்ற அடிப்படையில் மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும்.

÷இப்போது மின்சாரத் தட்டுப்பாடு உள்ளது. இதுபோன்ற டீசல் என்ஜினை வைத்துள்ள ஏழை விவசாயிகளுக்கு சூரிய ஒளியில் இயங்கக் கூடிய மின் மோட்டார்களை சாத்தியமுள்ள இடத்தில் வழங்க அரசு முன்வர வேண்டும். இதனால் மின்சாரம் இல்லாத நேரத்திலும் மோட்டாரை இயக்க முடியும் என்றார்.

தினமலர்

**தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,00:33 IST

திருவள்ளூர்: தொடர்ந்து பெய்துவரும் மழையால், குளிர்ந்த சீதோஷ்ண நிலை ஏற்பட்டதால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று காலை முதலே, அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. இதனால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பல இடங்களில் மழை நீருடன் கழிவுநீரும் கலந்து ஓடியதால், பொதுமக்கள் நடமாட சிரமப்பட்டனர்.திருவள்ளூரில் பாதாள சாக்கடை திட்டத் திற்காக தோண்டப்பட்ட பள்ளங்கள், சரிவர மூடாமல் விட்டு விட்டதால், மழை நீரால் பள்ளங்கள் தெரியாமல் நீர் நிரம்பி விட்டது. இது தெரியாமல், வாகன ஓட்டிகள் பள்ளங்களில் விழுந்து காயமடைந்தனர்.தொடர் மழையினால், கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

**கோழி வளர்ப்பு பயிற்சி ஆக., 23ல் ஆரம்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,02:34 IST

ஈரோடு: ஈரோட்டில் கனரா வங்கி சார்பில் வரும் 23ம் தேதி முதல் 28ம் தேதி வரை நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஈரோடு கனரா வங்கி முதுநிலை மேலாளர் கல்யாண கிருஷ்ணன் கூறியதாவது:மத்திய அரசின் கிராமப்புற வளர்ச்சி அமைச்சகம் வழிகாட்டுதல்படி, பெண்களுக்கு, மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு, இளைஞர்களுக்கு, விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் துவங்கும் வகையில், இலவசமாக நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஈரோடு அசோகபுரத்தில் உள்ள கனரா வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் சேர விரும்புவோர் பெயர், முகவரி, கல்வித்தகுதி, விபரம் ஆகியவற்றை எழுதி பயிற்சி நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**மாவுப்பூச்சி தாக்குதல் மேலாண்மை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,00:20 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு கோவில்பாளையத்தில், வேளாண்மை துறை சார்பில், மாவுப்பூச்சி மேலாண்மை குறித்த கூட்டம் நடந்தது.
இதற்கு, ஊராட்சி மன்றத் தலைவர் தவமணி தலைமை வகித்தார். கோவில்பாளையம் அரசுப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் கந்தசாமி முன்னிலை வகித்தார். கிணத்துக்கடவு வேளாண்மை அலுவலர் கணேசன் வரவேற்றார். விழாவில், தென்னை காப்பீட்டு திட்டம் மற்றும் வேளாண்துறையின் நலத்திட்டங்கள் பற்றியும், வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டம் பற்றியும், மாவுப்பூச்சி தாக்குதல் மற்றும் அதன் மேலாண்மை குறித்தும் கூறப்பட்டது. விழாவில், வேளாண்மை இணை இயக்குநர் நடராஜ், ஆலோசகர் ஜானகிராமன், துணை வேளாண்மை அலுவலர் நாகேஷ், பணியாளர்கள் முருகவேல், ராஜேந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் கணேசமூர்த்தி நன்றி கூறினார்.

**ஆனைமலையில் கொப்பரை ஏலம் ஒத்திவைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,00:17 IST

பொள்ளாச்சி : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வரும் 23ம் தேதி நடக்கவுள்ள கொப்பரை ஏலம், 24ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் கொண்டு வரும் கொப்பரை தரம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையில் ஏலம் விடப்படுகிறது. கொப்பரை வியாபாரிகளும், எண்ணெய் நிறுவனங்களும் நேரடியாக ஏலம் எடுத்து கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்கின்றனர். ஆனைமலையில் வரும் 23ம் தேதி கொப்பரை ஏலம் நடக்க இருந்தது. ஓணம் பண்டிகைக்கு அரசு விடுமுறை அறிவித்துள்ளதால் அன்று கொப்பரை ஏலம் ரத்து செய்யப்பட்டு, அடுத்த நாளுக்கு (24ம் தேதி) ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனால், ஆனைமலை சுற்றுப்பகுதியில் உள்ள விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு 24ம் தேதி கொப்பரை மூட்டைகளை கொண்டு வரவேண்டும் என்று விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் அறிவித்துள்ளா

**மஞ்சி உலர்த்தும் பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,00:18 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதிகளில் மழை நின்று வெயில் அடிக்க தொடங்கியுள்ளதால், மஞ்சி மில்களில், தென்னை மஞ்சியை உலர்த்தும் பணி நடந்து வருகிறது. இதனால், கூலித்தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
கிணத்துக்கடவு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பருவ மழை தொடர்ந்து பெய்ததால், கிணத்துக்கடவு பகுதிகளில் இயங்கி வந்த தென்னை மஞ்சி தொழிற்சாலைகளில், வேலைகள் நடைபெறவில்லை. தற்போது, மழை நின்று, வெயில் அடிக்க தொடங்கி உள்ளது. இதனால், நல்லட்டிபாளையம், தாமரைக்குளம், கோவில்பாளையம், நெகமம், கோதவாடி, கொண்டம்பட்டி போன்ற பகுதிகளில் தென்னை மஞ்சி நார் பிரிக்கும் தொழிற்சாலையில், மீண்டும் மஞ்சி நார் தயாரிக்கும் தொழில் நடக்க ஆரம்பித்துள்ளது. இதனால், கூலி தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பயிர்க்கடன் கோரி விரைவில் போராட்டம் : தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,01:52 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநிலக்குழு கூட்டம் நடந்தது. மாநிலத்தலைவர் பழனிசாமி தலைமை வகித்தார். மாநில செயலாளர் ஏழுமலை, விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமிநடராஜன் உட்பட பலர் பங்கேற்றனர்.
இக்கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் பாலகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது: மத்திய அரசு கரும்பு டன்னுக்கு 1,391 ரூபாயும், மாநில அரசு 2000 ரூபாய் என்றும் அறிவித்துள்ளது. மத்திய அரசு கரும்பு டன் 3,000 ரூபாய் என அறிவிக்க வேண்டும். இதை வலியுறுத்தி செப்டம்பர் 17ம் தேதி முதற்கட்டமாக அந்தந்த பகுதியில் உள்ள கரும்பு ஆலை முன் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். மாநில அளவிலான போராட்டம் பிற சங்கங்களை அழைத்துப்பேசி தேதி அறிவிக்கப்படும்.
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை திறக்கவும், அதற்காக 21 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்திருப்பதும் வரவேற்கத்தக்கது. இனியும் காலம் தாழ்த்தாமல் ஆலையை உடன் பராமரிப்பு பணி செய்து செயல்பாடுகளை துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் ஒன்பது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தனியாருக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதை கைவிட வேண்டும். அந்தந்த பகுதியில் உற்பத்தியாகும் கரும்பை அந்தந்த பகுதியில் உள்ள கரும்பாலைகளுக்கே வழங்க வேண்டும். வேறு ஆலைகளுக்கு வழங்கும் முறையை செயல்படுத்தக்கூடாது.
மேட்டூர் ஆணை தாமதமாக திறக்கப்பட்டதுடன், தற்போது மிகக்குறைந்த அளவே தண்ணீர் திறக்கப்படுவதால் கடைமடை வரை செல்வதிலும், விவசாயத்துக்கு போதுமான நீர் கிடைப்பதும் கேள்விக்குறியாகிது. 14 ஆயிரம் கனஅடிக்கு குறையாமல் தண்ணீர் திறக்க வேண்டும். இம்மாதம் வரை கர்நாடகத்தில் இருந்து தமிழக அரசு 10 டி.எம்.சி., நீரைக்கூட பெறவில்லை. நடுவர் மன்ற தீர்ப்புப்படி கர்நாடகத்தில் இருந்து உரிய நீரை பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அரசு மயமாக்கப்பட்ட வங்கிகளில் வேளாண் கடன் வழங்க சிட்டா, அடங்கல், ஒன்பது பேர் கொண்ட குழு வேண்டுமென கேட்டு தாமதப்படுத்துகின்றனர். உரிய முறையில் பயிர்க்கடன் வழங்கக்கோரி செப்டம்பர் முதல் வாரத்தில் போராட்டம் நடத்தப்படும். வங்கிக்கடன் மூலம் வழங்கப்பட்ட 300க்கும் மேற்பட்ட டிராக்டர்களை விவசாயிகளிடம் இருந்து பறிமுதல் செய்யும் நடவடிக்கையை வங்கி நிறுத்தவிட்டு, அவர்கள் பணத்தை செலுத்த கூடுதல் தவணை வழங்க வேண்டும்.
இலவச மின்சார மோட்டார் வழங்குவதான அரசின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதை மூன்று, ஐந்து எச்.பி., மோட்டார் வழங்காமல் அந்தந்த பகுதி விவசாயிகளின் தேவை அறிந்து வழங்க

வேண்டும். மின் இணைப்புக்களை விவசாயிகளுக்கு தாமதமின்றி வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**திராட்சை விவசாயிகளை மிரட்டும் வியாபாரிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,22:17 IST

தேனி : திராட்சை விவசாயிகளை வியாபாரிகள் மிரட்டுவதாக கலெக்டரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.
கம்பத்தில் சமீபத்தில் நடந்த திராட்சை விவசாயிகள் கருத்தரங்கில் பேசிய விவசாயிகள், வியாபாரிகள் மீது கலெக்டரிடம் புகார் தெரிவித்தனர். விவசாயிகளிடம் ஒரு மனுவுக்கு திராட்சைக்கு விலை நிர்ணயிப்பதை கைவிட வேண்டும். கிலோ அடிப்படையில் விலை கொடுக்க வேண்டும்(ஒரு மனு என்பது 12 கிலோ எடை கொண்டது) என பேசினர்.
கே.கே.பட்டியை சேர்ந்த திராட்சை விவசாயி நந்தகுமாரின் மனைவி இது குறித்து கடுமையாக பேசியுள்ளார். இதை அறிந்த திராட்சை விவசாயிகள் அவரை தொலைபேசியில் மிரட்டியதுடன், "எப்படி இனி திராட்சையை விற்கிறீர்கள் என பார்க்கிறோம்' என சவால் விட்டுள்ளனர். இந்நிலையில் அவரது தோட்டத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள திராட்சைகளை ஒருவாரமாக வாங்காமல் கடத்தி வருகின்றனர். இது குறித்து அவர் கலெக்டர் முத்துவீரனிடம் புகார் செய்துள்ளார்.

**வாழைக்கு பயிர் காப்பீடு திட்டம்: விவசாயிகளுக்கு வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 20,2010,22:38 IST

சிவகங்கை : ""வாழை விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும்," என தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள வாழை பயிருக்கு காப்பீடு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிவகங்கை தாலுகாவில் தமறாக்கி, மானாமதுரையில் முத்தனேந்தல், இளையான்குடியில் அ.திருவுடையார்புரம், திருப்புவனம், திருப்பாச்சேத்தி பிர்க்கா விவசாயிகள் பயன்பெறலாம்.
பயிர் காப்பீடு பிரிமியம் 6.6 சதவீதம். ஏக்கருக்கு, மூன்று லட்சத்து 91 ஆயிரத்து 644 ரூபாய் காப்பீடு தொகை. மொத்த பிரிமியம், ஏக்கருக்கு 25 ஆயிரத்து 848 ரூபாய். இதில் கடன் பெறும் விவசாயிகள் 12 ஆயிரத்து 924; கடன் பெறாதவர்கள் 11 ஆயிரத்து 632 ரூபாய் செலுத்த

வேண்டும். பிரிமிய தொகையை செப்., 15 ம் தேதிக்குள் தேசிய, கூட்டுறவு வங்கிகளில் செலுத்தவேண்டும். விபரங்களுக்கு வட்டார தோட்டக்கலை அலுவலரை அணுகலாம் என்றார்.

**சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் கோரிக்கைகள்தீர்த்து வைக்க கரும்பு உற்பத்தியாளர் சங்கம் வேண்டுகோள்**

ஆகஸ்ட் 21,2010,00:00 IST

புதுச்சேரி: சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழக முதல்வர் தீர்த்து வைக்க வேண்டும் என கரும்பு உற்பத்தியாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.தமிழ்நாடு கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு உற்பத்தியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் எம்பாவை எஸ். யோகநாதன், பொதுச் செயலாளர் நாகு. சுப்ரமணியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழக கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலை தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு முன் வைத்து உண்ணாவிரதமும், போராட்டமும் நடத்தி வருகின்றனர். இவர்களது நலனைக் காப்பது அரசின் முக்கிய முதல் கடமையாகும்.அரசு நிறுவனம் மற்றும் அரசு ஆலைகளில் பணிகள் சரிவர செய்யப்படுவதில்லை என்பது பொதுவான கருத்து; உண்மையும் அதுதான். நிர்வாகம் மற்றும் உயர் அதிகாரிகளின் திறமையின்மையாலும், அலட்சியப் போக்காலும் அரசியல் குறுக்கீட்டினாலும் பணிகள் தனியார் நிறுவனத்தைப் போல் சரிவர நடைபெறவில்லை.இதை தவிர்க்கும் வகையில் அனைத்து பணியாளர்கள்,

தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரியான அரசு ஊதிய அமைப்பு கொண்டு வர வேண்டும். ஒரே நிலையில் இரண்டு விதமான ஊதியம் தவிர்க்கப்பட வேண்டும். இதனால் ஊதிய நஷ்டத்துடன் மன வேதனையால் தான் அதிகம் பாதிப்பு ஏற்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் சில சங்கங்கள் தொழிலாளர் சங்கத் தேர்தல் நடந்த பின்புதான் ஊதியத்தை பற்றிய பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஐகோர்ட் டில் பெற்ற உத்தரவை விரைவில் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும்.பணியாளர் தொகுப்பு பட்டியல் அந்தந்த ஆலைகளின் தேவைக் கேற்ப நடைமுறைப்படுத்த வேண் டும். தொழிலாளர் சங்கத் தேர்தல் காலி பணியிடங்களை நிரப்புதல், தவறு செய்வோர் மீது நடவடிக்கை எடுத்தல், ஆலை லாபகரமாக இயங்க ஆவன செய்தல், புதியதாக ஏற்பட உள்ள இணை மின் திட்டத்திற்கேற்ப கரும்பு பயிரிட ஆவன செய்தல் போன்ற செயல் களை சர்க்கரைத் துறை நிர்வாகம் சரிவர செயல்படுத்துகிறதா என்பதனை அரசு கண்காணிக்க வேண் டும்.அரசியலை காரணம் காட்டி சரிவர செயல்படாத ஆலை நிர்வாகத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் முழு அரவை திறனுக்கேற்ப தேவையான கரும்பு இல்லை. வெளி ஆலைகளுக்கு சட்ட விரோதமாக கரும்பு கடத்தப்படுவதை தவிர்க்கும் பொருட்டும், தேவைக்கு ஏற்ப கரும்பு பயிர் செய்ய

வேண்டியகட்டாய சூழ்நிலையை கருதியும், இயற்கை சூழ்நிலைகளை கருதியும் தொழிலாளர்கள் பிரச்னையை விரைவில் முடிவு செய்ய வேண்டிய கட்டாயத்தின் அடிப்படையில், ஆலைகளில் விரைவில் அரவை துவங்க அரசு ஆவன செய்ய வேண்டும். தமிழக முதல்வர் நேரடியாக தலையிட்டு, உடனடியாக தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை விரைவில் செயல்படுத்தி விவசாயிகள், தொழிலாளர்கள் நலனை காத்திட வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## *கேரளாவில் ஓணம் பண்டிகை: நேந்திரக்காய் விலை 'கிடுகிடு' உயர்வு ஒரு கிலோ 40 ரூபாய்க்கு விற்பனை*

*கோழிக்கோடு,ஆக.21–*

*கேரளாவில் ஓணம் பண்டிகையையொட்டி நேந்திரக்காய் விலை கிடுகிடுவென உயர்ந்து விட்டது. ஒரு கிலோ நேந்திரம்பழம் 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.*

*விலை உயர்வு*

*ஓணம் பண்டிகை என்றாலே நேந்திரக்காய் சிப்சும், வறுவலும் அதில் முக்கிய இடம் வகிக்கும். இதனால் கேரள மக்கள் இப்போதே நேந்திர வாழைத்தார்களை வாங்கி குவித்து வருகிறார்கள். அதோடு வியாபாரிகளும் சிப்ஸ் போடுவதற்காக நேந்திர பழங்களை வாங்குகிறார்கள். அனைத்து தரப்பினரும் நேந்திரம் பழம் வாங்குவதால் அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து உள்ளது.*

*கடந்த ஒரு மாத காலமாக வயநாடு மார்க்கெட்டில் நேந்திரக்காய் குவிண்டாலுக்கு 2500 ரூபாய் போனது. நேற்று முன்தினம் ஒரு குவிண்டால் நேந்திரக்காய் 2850 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த நிலையில் ஓணத்திற்கு 2 நாட்களே உள்ளதால் நேற்று வயநாடு மார்க்கெட்டில் நேந்திரக்காய்யை கேரள வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கினார்கள். இதனால் நேற்று ஒரே நாளில் நேந்திரக்காய் விலை குவிண்டாலுக்கு 150 ரூபாய் அதிகரித்து 3 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனது.*

*வயநாடு நேந்திரக்காய்க்கு மவுசு*

*தற்போது வயநாட்டில் விளையும் நேந்திரக்காய் வரத்து அதிகரித்து உள்ளது. கல்பெட்டா,மீனங்காடி, முட்டில், அம்பலவயல், மானந்தவாடி ஆகிய பகுதிகளில் இருந்து நேந்திரக்காய் வயநாடு மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வருகிறது. அதோடு தமிழகத்தில் இருந்து*

*திருநெல்வேலி, திருச்செந்தூர், திருச்சி ஆகிய பகுதிகளில் இருந்தும் நேந்திரக்காய் விற்பனைக்கு வருகிறது.*

*ஆனால் வயநாடு நேந்திரக்காய் நல்ல சுவையாக இருக்கும் என்பதால் அதை வாங்குவதில் வியாபாரிகள் போட்டிப் போட்டுக் கொண்டு வாங்கி செல்கிறார்கள்.*

*கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு நேந்திரம் பழம் ஒரு கிலோ 18 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்கப்பட்டது. ஆனால் நேற்று ஒரு கிலோ நேந்திரம் பழம் 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்பட்டது.*

## முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவித்தபடி தமிழக விவசாயிகளுக்கு இலவச பம்புசெட் மோட்டார்களை வழங்குவது எப்படி? ராஜஸ்தான், மராட்டியத்தில் தமிழக அதிகாரிகள் குழு பார்வையிடுகிறது

*சென்னை, ஆக.21–*

*முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவித்தபடி, தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கு இலவச பம்புசெட் மோட்டார்களை எப்படி வழங்குவது என்பது தொடர்பாக ஆய்வு செய்வதற்கு, பொறியாளர்கள் குழு, ராஜஸ்தான் மற்றும் மராட்டிய மாநிலத்துக்கு செல்கிறார்கள்.*

*சுதந்திர தினத்தில் அறிவிப்பு*

*கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற சுதந்திர தின விழா உரையில் 'சிறு, குறு விவசாயிகளின் பம்புசெட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களை நீக்கிவிட்டு, அவற்றுக்கு பதிலாக, புதிய மின் மோட்டார்கள் அரசின் சார்பாக இலவசமாகப் பொருத்தித் தரப்படும். மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடன், புதிய மோட்டார்கள் பொருத்தித் தரப்படும்' என்று முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவித்தார்.*

*வெளிமாநிலம் சென்று ஆய்வு*

*இத்திட்டத்தை ஒரே ஆண்டில் செயல்படுத்துவது என்பது இயலாத காரியம் என்பதால் படிப்படியாக 5 ஆண்டுகளில் அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் புதிய மின்மோட்டாரைப் பொருத்தினால், குறைந்தபட்சம் 20 சதவீதம் மின் சேமிப்பு இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அதிகபட்சம் 30 சதவிகிதம் வரை இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.*

*இந்த திட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை களைய அரசு முடிவு செய்தது. அதன் பேரில், இதேபோன்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநிலங்களுக்கு தமிழக அதிகாரிகளை அனுப்பி, நெளிவு, சுளிவுகளை அறிந்து வரச் செய்யலாம் என்று அரசு முடிவெடுத்தது. இதைத் தொடர்ந்து தமிழக அதிகாரிகள் குழுவினர், இது பற்றி பார்வையிட்டு வருவதற்கு செல்கிறார்கள்.*

*ராஜஸ்தான், மராட்டியம்*

இதுபற்றி தமிழக எரிசக்தித்துறை செயலாளர் பி.டபிள்யூ.சி. டேவிதார் நேற்று கூறியதாவது:– விவசாயிகளுக்கு இலவச பம்புசெட் மோட்டார் வழங்கும் திட்டம், நம் நாட்டில் தற்போது, ராஜஸ்தான் மற்றும் மராட்டியம் ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் அந்த மாநிலங்களுக்குச் சென்று, அங்கு எவ்வாறு இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்று பார்வையிட்டு வருவதற்கு, தமிழக பொறியாளர்கள் குழுவை அனுப்ப திட்டமிடப்பட்டது.

இதன்படி, ராஜஸ்தான் மாநிலத்துக்கு தமிழகத்தை சேர்ந்த மின்துறை பொறியாளர்கள் குழு, சென்றுள்ளது. அங்கு ஆகஸ்ட் 19 முதல் ஆகஸ்ட் 22–ந் தேதி வரை அவர்கள், பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுகிறார்கள். இதுபோல், மற்றொரு பொறியாளர்கள் குழு, மராட்டிய மாநிலம் புனே சென்று, 23–ந் தேதி முதல் 26–ந் தேதி வரை பல்வேறு இடங்களைப் பார்வையிடுகிறார்கள். இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுகிறதா? விவசாயிகளுக்கு அந்த அரசு எப்படி பம்புசெட் மோட்டார்களை கொடுத்தது என்பது பற்றியெல்லாம் அவர்கள் ஆய்வு செய்கிறார்கள். தமிழகம் திரும்பியதும் அவர்கள் அது பற்றிய அறிக்கையினை அரசுக்கு அளிக்கிறார்கள்.

## செப்.15 முதல் களஆய்வு

அதை அடிப்படையாகக் கொண்டு, இந்த மாத இறுதியில், தலைமை பொறியாளர்களை கொண்ட ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது. அதில், வெளிமாநிலம் சென்று பொறியாளர்கள் குழு அளித்த ஆய்வறிக்கையை ஆராய்ந்து தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்யப்படும். அதன் பேரில் புதிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, தமிழகத்தில் எப்படி இத்திட்டத்தை செயல்படுத்துவது என்பது பற்றி அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும். அதன்பிறகு, செப்டம்பர் 15–ந் தேதியில் இருந்து கள ஆய்வுப் பணிகள் தொடங்கும்.

## மின்சிக்கனத்தை நிரூபித்த பிறகு....

தமிழகத்தில் $5\frac{1}{2}$ லட்சம் இணைப்புகள், 3 குதிரை திறன் சக்தி மோட்டார்களை கொண்டு இயங்கி வருகிறது. 9.81 லட்சம் இணைப்புகள், 5 குதிரை திறன் சக்தி கொண்ட மோட்டார்களை பெற்றுள்ளன. அவர்கள் அனைவருக்கும் படிப்படியாக பம்புசெட்டுகள் வழங்கப்படும்.

இந்த பம்புசெட்டுகளை தயாரித்துத் தருவதற்கு பல நிறுவனங்கள் ஆர்வம் தெரிவித்துள்ளன. அதுவும், அந்த மோட்டாரை பயன்படுத்துவதால் மின்சார பயன்பாடு குறைந்துள்ளது என்பதை நிரூபித்துக் காட்டியபிறகே, தங்களுக்கு சேரவேண்டிய பணத்தை பெற்றுக் கொள்வதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். புதிய மோட்டார் மூலம் 20 சதவீதம் மின்சாரம் சிக்கனம் ஏற்பட்டால், மின் கட்டண செலவும் குறையும். தமிழக அரசு அதிக விலை கொடுத்து வாங்கும் மின்சார செலவும் கணிசமாக மிச்சமாகும்.

இவ்வாறு டேவிதார் தெரிவித்தார்.

**மத்திய அரசு நிதி உதவியுடன் அதிக லாபம் தரும் எண்ணை வித்து தாவர தோட்டம் அமைக்கலாம் பயிர் செய்யப்படாத நிலங்களை வைத்திருப்போர் அணுகலாம்**

கோவை, ஆக.21–

பயிர் செய்யப்படாத நிலங்களை வைத்திருப்போர் மத்திய அரசு நிதி உதவியுடன்அதிக லாபம் தரும் எண்ணை வித்து தாவர தோட்டம் அமைக்கலாம்.

இது குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

போக்குவரத்து

இந்தியாவில் போக்குவரத்துக்கு தேவையான ஆற்றலில் 95 சதவீதம் கச்சா எண்ணெயை சார்ந்து உள்ளது. இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நமது நாடு கடந்த 2007–08–ம் ஆண்டில் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் இறக்குமதிக்காக அந்நியச் செலாவணி கையிருப்பில் இருந்து ரூ.2 லட்சத்து 72 ஆயிரத்து 699 கோடி செலவிடப்பட்டது.

இந்த நிலையில் தாவரங்களை மூலமாக கொண்ட எரிபொருள், கச்சா எண்ணெய்க்கு சரியான மாற்றாக நிருபிக்கப்பட்டு உள்ளது. உயிர் திரவ எரிபொருட்களாகிய பயோடீசல் மற்றும் எத்தனால் ஆகியவற்றின் பயன்பாடு உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பரவி உள்ளது.

பயோடீசல்

உயிரி திரவ எரிபொருள் உற்பத்தி மூலம் ஆற்றல் வளம், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, கச்சா எண்ணெய் இறக்குமதி குறைவு மற்றும் கிராமபுற வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தாவர மூலம் கொண்ட எண்ணெய் மரவித்துக்களாகிய காட்டாமணக்கு, புங்கன், இலுப்பை, வேம்பு மற்றும் சொர்க்க மரம் ஆகியவை பயோடீசல் உற்பத்திக்கு ஏற்றவையாக கண்டறியப்பட்டு உள்ளன. எண்ணெய் மரவித்துகளில் இருந்து பிரித்து எடுக்கப்படும் எண்ணெய் டீசலுக்கு மாற்றாக பயன்படுத்தலாம் என்று வர்த்தக ரீதியாக நிரூபிக்கப்பட்டு உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு மத்திய அரசின் நிதி உதவியுடன் வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் உயிரி எரிபொருள் திரவ தோட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த தோட்டங்கள் அனைத்தும் அரசு நிலங்கள், பேரூராட்சி மற்றும் பஞ்சாயத்து பகுதிகளில் அமைந்துள்ள பொது நிலங்கள், மாநகராட்சி மற்றும் கோவில் நிலங்களில் 10 ஹெக்டேரில் நிறுவி பராமரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தயாரிப்பு கலன்

மேலும் இதற்காக 100 ஹெக்டேருக்கு அதிகமாகவோ அல்லது தொகுப்புகளாகவோ நிலங்கள்

கிடைக்கும் பட்சத்தில் மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி ஆற்றல் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் பயோடீசல் தயாரிப்பு கலன்கள் நிறுவ முயற்சி மேற்கொள்ளப்படும்.
இதற்காக பயிர் செய்யப்படாத நிலங்களை வைத்திருப்போர் அல்லது நிறுவனங்கள் ஆர்வம் இருப்பின் இந்த திட்டத்தை பயன்படுத்தி பயன் பெறலாம். மேலும் விவரங்களை அறிய வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் அல்லது உயிர் திரவ எரிபொருள் சிறப்பு மையத்தை அணுகலாம்.
இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## எதிர் வரும் புதிய பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.5 கோடி பொதிகளாக அதிகரிக்கும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை
வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) நம் நாட்டில் 3.50 கோடி பொதி பருத்தி உற்பத்தியாகும் என அண்மைக் கால மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது. இது, நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 2.95 கோடி பொதிகளாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. (ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டதாகும்).
சாகுபடி பரப்பளவு
அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, நடப்பு பருவத்தில் இந்தியாவில், பருத்தி சாகுபடி பரப்பளவு 10 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டு ஜூன் முதல் ஜூலை 2–ந் தேதி வரையில் பயிரிடும் பரப்பளவு 50 சதவீதம் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2009–ஆம் ஆண்டு கோடை கால விதைப்பு பருவம் வரையில் 1.01 கோடி ஹெக்டேரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. பருத்தி உற்பத்தியில் உலக அளவில் நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
உலக அளவில் பருத்தி ஏற்றுமதியில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. நடப்பு பருவத்தில் (ஆகஸ்டு–ஜூலை) அந்நாட்டில் 1.85 கோடி பொதி பருத்தி உற்பத்தியாகி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, முந்தைய பருவத்தைக் காட்டிலும் 52 சதவீதம் அதிகமாகும்.
தமிழ்நாடு
பருத்தி ஆலோசனை வாரியத்தின் புள்ளிவிவரப்படி, 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், தமிழ்நாட்டில் 1.09 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது, 2009–10 பருவத்தில் 1.04 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்தது. 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 95,000 ஹெக்டேர் பரப்பளவில்தான் பருத்தி சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவு சரிவடைந்து வருவதாக தெரிகிறது. நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய தென்

மாநிலங்களின் பங்களிப்பு, ஒட்டுமொத்த அளவில் 7 சதவீதமாக உள்ளது.

இந்திய ஜவுளி, பருத்தி துறைகள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. பருத்தி சாகுபடி, வர்த்தகம் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலுமாக இத்துறை சுமார் 5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு தயாரிப்புகளை அளிப்பதில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

## தேயிலை தோட்டங்களில்

# உரமிடும் பணியில் விவசாயிகள் தீவிரம்

மஞ்சூர், ஆக.21–

மஞ்சூர் மற்றும் சுற்று வட்டார பகுதி களில் தேயிலை தோட்டங் களுக்கு உரமிடும் பணி யில் விவசாயிகள் தீவி ரம் காட்டி வருகிறார் கள்.

### தேயிலை விவசாயம்

நீலகிரி மாவட்டத்தின் முக்கிய முதுகெலும்பாக விளங்கி வருவது பச்சை தேயிலை விவசாயம். இந்த விவசாயத்தை நம்பி சுமார் 65 ஆயிரம் விவசாயிகள் மட்டு மின்றி, ஆயிரக்கணக் கானகூலிதொழிலாளர்களும் வாழ்ந்து வருகிறார்கள்.

தேயிலைக்கு கடந்த சுமார் 2 ஆண்டு காலமாக ஓரளவு விலை கிடைத்து வந்தது. ஆனால் கடந்த 6 மாத கால மாக விலை படிப்படி யாக சரிந்து தற்சமயம் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை களில் அதிகபட்சமாக 1 கிலோ ரூ.7 என விலை நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளது.

### புலம்பல்

விவசாயிகள் ஒரு கிலோ பச்சை தேயிலையை பறிக்க ரூ.3 முதல் ரூ.4 வரை செல வாகிறது. மேலும் உரமிடுதல், பராமரிப்பு போன்றவற்றுக்கு ரூ.3 முதல் ரூ.4 வரை செல வாகிறது.

இதனால் விவசாயி கள் கிடைக்கும் பணம் செல வுக்கே சரியாகிறது என்று புலம்புகிறார்கள்.

கடந்த காலங்களில் தேயிலை தோட்டங்களுக்கு மே–ஜூன், ஆகஸ்ட்–செப்டம் பர், அக்டோபர்–நவம்பர் மாதங்கள் என 3 முறை விவ சாயிகள் உரமிட்டு தேயிலை மகசூல் பெற்று, பிழைப்பு நடத்தி வந்தனர்.

தற்சமயம் இந்த முறை பச்சை தேயிலை விலை வீழ்ச் சியால் படிப்படியாக குறைக் கப்பட்டு கடந்த சில ஆண்டு களாக ஆண்டுக்கு 2 முறை மட்டும் உரமிடும் அவல நிலைக்கு தள்ளப்பட்டனர்.

### உரமிடும் பணி தீவிரம்

விவசாயிகளுக்கு தற் போது கூட்டுறவு நிறுவனம் சார்பில் கடன் முறையில் உரம் பெற்று தங்களது தேயிலை தோட்டங்களுக்கு இடும் நிலை ஏற்பட்டு உள் ளது. மேலும் மஞ்சூர் பகுதி யில் கடந்த சில நாட்களாக பெய்த மழையின் காரண மாக விவசாயிகள் உரமிடும் பணியில் தீவிரமாகடுபட்டு வருகிறார்கள்.

குந்தா (எடக்காடு), மஞ் சூர் மேற்குநாடு, மகாலிங்கா, கைக்காட்டி, பிக்கட்டி ஆகிய கூட்டுறவு தொழிற் சாலைகள் மூலம் விவ சாயிகளுக்கு அம்மோனிய பேஸ் உரம் வழங்கப்பட்டுள் ளது. இதனை கொண்டு தங்களது தேயிலை தோட் டங்களுக்கு உரமிடும் பணி யில் தீவிரம் காட்டி வருகி றார்கள்.

இந்த உரத்தை கொண்டு, பெய்த மழையின் பலனால் அடுத்த 50 நாட்களில் மகசூல் அதிகரிக்கும் என்று தெரிகிறது.



மஞ்சூர் அருகே எடக்காடு பஜாரில் உரங்களை தயார்படுத்தும் விவசாயிகள்.